आवक
INWARD 293
पावरग्रिड /POWERGRID
करूर /KARUR. 06.06.19

அனுப்புநர்
திருமதி.ப.கீதா பிரியா ,
பொது தகவல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது), திருப்பூர்.
தொலைபேசி : 0421 -2971140
மின்னஞ்சல் - pagen.tntpr@nic.in

பெறுநர்
பொது தகவல் அலுவலர் மற்றும்
துணை பொது மேலாளர் பவர் கிரிட்
கார்ப்பரேஷன் அப் இந்தியர் லிமிடெட்,
400/230 KV சப் ஸ்டேஷன்,
கோயமுத்தூர் மெயின் ரோடு,
கே.பரமத்தி (அஞ்சல்),
கரூர் - 639111.

மூ.மு.எண்.7246/2019/இ1, நாள்.24.05.2019.

அய்யா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 - திருப்பூர் மாவட்டம் - தாராபுரம் வட்டம் - முளையாம்பூண்டி (அஞ்சல்), குமரபாளையம் என்ற முகவரியைச் சார்ந்த திரு.M.கந்தசாமி த/பெ.முத்துச்சாமி கவுண்டர் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன்கீழ் தகவல்கள் கோரியது - தகவல் வழங்குதல் தொடர்பாக.

பார்வை : திரு.M.கந்தசாமி த/பெ.முத்துச்சாமி கவுண்டர் என்பவரது தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-கீழ் மனு நாள்: 15.05.2019.

------------

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், முளையாம்பூண்டி (அஞ்சல்), குமரபாளையம் என்ற முகவரியைச் சார்ந்த திரு.M.கந்தசாமி த/பெ.முத்துச்சாமி கவுண்டர் பவர் கிரிட் உயர் அழுத்த மின்பாதை தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன் கீழ் தகவல்கள் வழங்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் கோரிய தகவல்கள் தங்களது அலுவலகத்தைச் சார்ந்தது. எனவே மனுதாரரின் மனு அசலாக தகவல் அறியும் உரிமைச் கட்டம் 2005 பிரிவு 6(3)-ன் கீழ் உரிய தகவல்கள் வழங்கும் பொருட்டு தங்களது அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்படுகிறது.

இணைப்பு: அசல் மனு

பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
திருப்பூர்.

நகல்: திரு.M.கந்தசாமி
த/பெ.முத்துச்சாமி கவுண்டர்,
குமரபாளையம்,
முளையாம்பூண்டி அஞ்சல்,
வெள்ளகோவில் (வழி), தாராபுரம்(வ)
திருப்பூர் மாவட்டம்

தகவலுக்காக அனுப்பப்படுகிறது. மனுதாரர் மேற்குறிப்பிட்ட அலுவலரை அணுகி கோரிய தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

24.05.19

3417
20-05-19

7246

RT470695932IN
20/5/19 தாராபுரம்

# தகவல் அறியும் உரிமைச்சட்டம் - 2005

அனுப்புனர்:

M. கந்தசாமி,
த/பெ. முத்துச்சாமி கவுண்டர்,
குமரபாளையம்,
முளையாம்பூண்டி (அஞ்சல்),
வெள்ளகோவில்(வழி),
தாராபுரம் (வட்டம்),
திருப்பூர் (மாவட்டம்) 638 111.

07246

369/19

பெறுநர்:

பொது தகவல் அலுவலர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர்,
திருப்பூர் மாவட்டம்.

20 MAY 2019

பொருள்: தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் தகவல் பெறுவது தொடர்பாக,

ஐயா,

இந்தியாவை வல்லரசு ஆக்கக்கூடிய திட்டங்களில் ஒன்றான உயர்மின் கோபுரங்கள் திட்டம், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், மூலனூர் ஒன்றியம் முளையாம்பூண்டி வருவாய் கிராமத்திற்குள்

1. எத்தனை திட்டங்கள் நடைமுறையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன் அதில்
   (அ) எந்தெந்த திட்டம் எங்கிருந்து எங்கு கொண்டு செல்ல உள்ளது,
   (ஆ) யார் அமைக்க உள்ளனர்,
   (இ) எத்தனை கிலோவாட்,
   (ஈ) இதை கொண்டு செல்லும் ஒப்பந்ததாரர் பற்றிய தகவல்,
   (உ) இத்திட்டத்திற்கு கடன் பெறும் பட்சத்தில் அதன் தகவல்,
   (ஊ) திட்ட அறிக்கை
   (எ) எந்தெந்த திட்டங்கள் எந்தெந்த பட்டா எண்ணில் வருகிறது (உத்தேசமாக)

ஆகிய ஆதாரப்பூர்வமான தகவலை, தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு5ன் கீழ் எனக்கு சட்டப்பிரிவு 7(1)ன்படி அதற்கு உண்டான காலக்கெடுவான முப்பது நாட்களுக்குள் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

" உண்மையுடன் "

நாள் : 15-05-2019
இடம் : குமரபாளையம்

இப்படிக்கு

ம.கந்தசாமி
M.கந்தசாமி

(பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன்)